திருத்தப்பட்டது.

செ.வெ.எண்: 39 நாள்:26.01.2017

# அரியலூர் கோதண்ட ராமசாமி திருக்கோவிலில் நடைபெற்ற சமபந்தி போஜனத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ் இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

அரியலூர் மாவட்டம், அரியலூரில் “குடியரசு தின விழாவை” முன்னிட்டு **கோதண்டராமசாமி கோவிலில்** இன்று (26.01.2017) நடைபெற்ற **சமபந்தி** நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் கலந்துகொண்டு தொடங்கி வைத்தார்.

**இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆலயங்கள் தோறும் அன்னதானம் எனும் திட்டத்தின்கீழ் தமிழக முழுவதும் 448 திருக்கோயில்களில் **குடியரசு தின** விழாவினை முன்னிட்டு அன்னதானம் வழங்க உத்தரவிட்டுள்ளார். அரியலூர் மாவட்டத்தில் அருள்மிகு ஆலந்துரையார் கோதண்டராமசாமி திருக்கோயில், அரியலூர், அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், திருமானூர், அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில், திருமழப்பாடி, அருள்மிகு பிரகதீஸ்வரர் ஆலயம், கங்கைகொண்ட சோழபுரம், அருள்மிகு கலியுக வரதராஜ பெருமாள், கல்லங்குறிச்சி ஆகிய 5 திருக்கோயில்களில் நாள்தோறும் அன்னதானம் நடைபெற்று வருகிறது. **குடியரசு தினத்தை** முன்னிட்டு இன்று சிறப்பு உணவு ஏற்பாடு செய்யப்பட்டு, வழங்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.எம்.சந்திரகாசி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நல அலுவலர் திருமதி.ஹேமலதா, இந்து சமய அறநிலைத்துறை உதவி ஆணையர் திரு.செந்தில்குமார், செயல் அலுவலர் திருமதி.மகேஸ்வரி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**